ISSN: 2582–5518




புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




புதன் ❖ செப்டம்பர். 06, 2023 சென்னை & புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 334 ❖ ரூ.10

## ஜி20 குடியரசுத் தலைவர் அழைப்பிதழில் இந்தியாவுக்கு பதிலாக

# ‘பாரத்’

### “பா.ஜ.க. ஆட்சியை வீழ்த்தும் கூட்டணிக்கு இண்டியா என்று பெயர் சூட்டியதில் இருந்து பா.ஜ.க.வுக்கு இந்தியா என்ற சொல்லே கசந்து வருகிறது: மத்திய அரசு மீது எதிர்க்கட்சிகள் விமர்சனம்

புதுடெல்லி, செப். 6-

ஜி20 விருந்து அழைப்பிதழில் பாரத் குடியரசுத் தலைவர் (President of Bharat) என அச்சிட்டிருப்பதை விமர்சித்துள்ள காங்கிரஸ் கட்சி, இதன் மூலம் மாநிலங்களின் ஒன்றியம் தாக்குதலுக்குள்ளாகி இருப்பதாகக் குற்றம் சாட்டியுள்ளது. இதேபோல், திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடுமையாக விமர்சித்துள்ளன.

ஜி20 உச்சி மாநாடு வரும் 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் டெல்லியில் நடைபெற உள்ளது. இதில், பங்கேற்க அமெரிக்க அதிபர் ஜோ பிடன் முதல் உறுப்பு நாடுகளின் தலைவர்கள் வரை பலரும் பங்கேற்க இருக்கிறார்கள். உச்சி மாநாடு தொடங்கும் 9-ம் தேதி இரவு விருந்தை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு அளிக்க இருக்கிறார். இதற்கான அழைப்பிதழில் ‘President of Bharat’ என அச்சிட்டிருப்பதாகத் தெரிகிறது. வழக்கமாக ‘President of India’ என்றே அச்சிடப்படும் நிலையில், வழக்கத்துக்கு மாறாக இவ்வாறு அச்சிடப்பட்டிருப்பதை காங்கிரஸ் விமர்சித்துள்ளது.


On the occasion of G20 Summit

The President of Bharat
requests the pleasure of the company of

**ஆர்எஸ்எஸ் தலைவரின் கருத்து நடைமுறையில்**

கடந்த செப்டம்பர் 1-ஆம் தேதி சக்கல் ஜெயின் சமாஜத்தில் பேசிய ஆர்எஸ்எஸ் தலைவர் மோகன் பாகவத், "இந்தியாவுக்குப் பதிலாக பாரத் என்ற சொல்லையே நாம் பயன்படுத்தும் பழக்கத்தைக் கொண்டுவர வேண்டும். மொழிகள் என்னவாக இருந்தாலும் பண்டைய காலம் முதல் பாரத் என்ற பெயர் தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதை நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்" என்று கூறியிருந்து நினைவுகூரத்தக்கது.

இது குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் கருத்துப் பதிவிட்டுள்ள காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பு பொதுச் செயலாளர் ஜெயராம் ரமேஷ், "அந்தச் செய்தி உண்மைதான். குடியரசுத் தலைவர் மாளிகையில் இருந்து ஜி20 உச்சி மாநாட்டை ஒட்டி செப்டம்பர் 9 நடைபெறும் இரவு விருந்து நிகழ்ச்சிக்கான அழைப்பிதழ் வந்துள்ளது. அதில் வழக்கத்துக்கு மாறாக ‘பாரத் குடியரசுத் தலைவர்’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது" என்று தெரிவித்துள்ளார். மேலும் அவர், "இந்திய அரசியல் சாசன சட்டப் பிரிவு 1 இனி இந்தியா என்றழைக்கப்பட்ட பாரதம், மாநிலங்களின் ஒன்றியம் என வாசிக்கப்படும்போல. மாநிலங்களின் ஒன்றியம் தற்போது தாக்குதலுக்கு உள்ளாகி இருக்கிறது" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விவகாரம் குறித்து கருத்து தெரிவித்துள்ள காங்கிரஸ் கட்சியின் அமைப்பு பொதுச் செயலாளர் கே.சி.வேணுகோபால், "பா.ஜ.க.வின் நாசகார புத்தியால் மக்களை எப்படி பிரிப்பது என்றுதான் சிந்திக்க முடியும். இந்தியர்களுக்கும் பாரதியர்களுக்கும் இடையே மீண்டும் பிளவை உருவாக்குகிறார்கள். நாம் தெளிவாக இருப்போம் - நாம் ஒருவரே! அரசியல் சாசனத்தின் பிரிவு 1, இந்தியா, அதாவது பாரதம், மாநிலங்களின் ஒன்றியமாக இருக்கும் எனக்கூறுகிறது. இண்டியா கூட்டணியைக் கண்டு அவர்கள் அச்சப்படுவதால் இதுபோன்ற அற்ப அரசியலைச் செய்கிறார்கள். பிரதமர் மோடி, உங்களால் என்ன முடியுமோ, அதைச் செய்யுங்கள். ஆனாலும், பாரதம் இணையும்; இண்டியா வெல்லும்" என தெரிவித்துள்ளார்.

“பா.ஜ.க. ஆட்சியை வீழ்த்தும் கூட்டணிக்கு இண்டியா என்று பெயர் சூட்டியதில் இருந்து பா.ஜ.க.வுக்கு இந்தியா என்ற சொல்லே கசந்து வருகிறது. இந்தியாவை வளர்ச்சிமிகு இந்தியாவாக மாற்றப் போகிறோம் என்று சொல்லி ஆட்சிக்கு வந்த பிரதமர் நரேந்திர மோடியால், ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா என்ற பெயரை மட்டும்தான் மாற்ற முடிந்திருக்கிறது. அரண்டவர் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பதைப்போல இந்தியா என்ற சொல்லே பாஜகவை மிரட்டுகிறது. தேர்தலில் இந்தியா என்ற சொல்லே பாஜகவை விரட்டும்” என்று முதல்வர் ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால், 'சில கட்சிகளின் கூட்டணி இந்தியாவாக மாறினால், நாட்டின் பெயரை மாற்றுவார்களா? நாடு 140 கோடி மக்களுக்கு சொந்தமானது. ஒரு கட்சிக்கு சொந்தமானது அல்ல. இண்டியா கூட்டணி தங்கள் கூட்டணியின் பெயரை பாரத் என மாற்றினால், இவர்கள் என்ன நாட்டின் பெயரை பாஜக என மாற்றுவார்களா? இது என்ன நகைச்சுவையாக உள்ளதே? வரக்கூடிய நாடாளுமன்றத் தேர்தலில் தங்களுக்கு ஆதரவான வாக்குகள் குறையும் என்று பாஜக நினைக்கிறது. அதனால்தான், அது பாரத் என பெயரை மாற்றி இருக்க வேண்டும்” என்று தெரிவித்துள்ளார்.

பெங்களூருவில் செய்தியாளர்களிடம் பேசிய கர்நாடக முதல்வர் சித்தராமையா, "நமது அரசியலமைப்பில், ’இந்திய அரசியலமைப்பு’ என்பது இணைக்கப்பட்டுள்ளது. இந்தியா என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு வார்த்தை. மாறாக, ’பாரத்’ என்பது தேவையில்லை என்று நினைக்கிறேன்" என்று கூறியுள்ளார்.

கொல்கத்தாவில் செய்தியாளர்களிடம் பேசிய முதல்வர் மம்தா பானர்ஜி, "இந்தியாவின் பெயரை அவர்கள் (மத்திய அரசு) மாற்றியுள்ளனர். ஜி 20 உச்சி மாநாட்டு விருந்து அழைப்பிதழில் ’Bharat’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆங்கிலத்தில் ’India’ என்றும் ’Indian Constitution’ என்றும், இந்தியில் ’Bharat ka Samvidhan’ என்றும் சொல்கிறோம். பாரத் என்ற வார்த்தை நாம் சொல்வதுதான். இதில் புதிதாக என்ன இருக்கிறது? ஆனால், ’இந்தியா’ என்ற பெயர் உலகம் அறிந்தது. திடீரென்று என்ன நடந்தது, ஏன் நாட்டின் பெயரை மாற்ற வேண்டும்?" என்று கேட்டுள்ளார்.

இந்நிலையில், இந்தியா என்ற வார்த்தைக்குப் பதில் பாரதம் என்ற வார்த்தை பயன்படுத்தப் பட்டிருப்பது குறித்து மத்திய அமைச்சர்களும், பாஜக பிரமுகர்களும் வரவேற்றுள்ளனர்.



▸ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் ’கப்பலோட்டிய தமிழன்’ வ.உ.சிதம்பரனாரின் 152-வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் உள்ள வ.உ.சி திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் பெரியசாமி, எ.வ.வேலு, மு.பெ.சாமிநாதன், சக்கரபாணி, பி.கே. சேகர்பாபு, மதிவேந்தன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஈஸ்வரன், பிரபாகரராஜா, ஹசன் மௌலானா, துணை மேயர் மகேஷ் குமார், பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா, செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் மோகன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்

புதுக்கோட்டை மாவட்டம்
அன்னவாசல் தி.மு.க. நகர செயலாளரும்
MSA நிறுவனங்களின் உரிமையாளர்,
தொழில் அதிபர்

M.S.அக்பர் அலி
அவர்கள்


நேற்று 05.09.2023 செவ்வாய்க்கிழமை அதிகாலை வஃபாத் ஆகி விட்டார்கள். அவர்களின் ஜனாஸா நல்லடக்கம் இன்று 06.09.2023 புதன்கிழமை காலை 10 மணிக்கு அன்னவாசல் பள்ளிவாசல் மையவாடியில் தொழுகைக்கு பிறகு நல்லடக்கம் செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஜனாஸா இருக்கும் இடம் :
பழைய சந்தைபேட்டை வீதி,
அன்னவாசல்

ஆழ்ந்த வருத்தத்துடன் :
VNA.மன்சூர் அலி, MY. நஜீமுதீன்,
பர்வீன், பகத், நஸ்ரீயா, நபீஸ், இலியானா,
MSA ரிசா மற்றும் குடும்பத்தார்கள், உறவினர்கள், நண்பர்கள்

MSA நிறுவனம், அன்னவாசல், புதுக்கோட்டை மாவட்டம். செல்: 99422 65435

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

" உனது வாழ்க்கைக்கு
ஒரு எல்லை அமைத்து வாழ்
ஆனால் எல்லைக்குள் ஒருபோதும்
வாழ்க்கையை அமைத்து விடாதே "




## புதுக்கோட்டை ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக்.பள்ளி மாணவர்கள் மாநில அளவிலான நீச்சல் போட்டியில் சாதனை



புதுக்கோட்டை, செப். 6–
புதுக்கோட்டை ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக். மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் மாநில அளவிலான நீச்சல் போட்டியில் வென்று சாதனை படைத்துள்ளனர். ஈரோட்டில் நடைபெற்ற அக்வா சேலஞ்ச்–2023 என்ற மாநில அளவிலான நீச்சல் போட்டியில் பல்வேறு மாவட்டங்களிலிருந்து மாணவர்கள் கலந்து கொண்டனர். அதில் தனுஷ், கிருஷ்ணன் பிஆர் 100மீ பிரிவில் இரண்டாம் பரிசும், சந்தோஷிகா பிஆர் 250 மீ பிரிவில் மூன்றாம் பரிசும், பிளை 50 மீ பிரிவில் இரண்டாம் பரிசும், தேவிகா கிரேடு 4ல் இரண்டாம் பரிசும் பெற்று மாநில அளவிலான நீச்சல் போட்டியில் வென்று பள்ளிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

நீச்சல் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்று பள்ளிக்கு வந்த மாணவர்களை பள்ளியின் முதல்வர் தங்கம் மூர்த்தி பரிசுகள் வழங்கி பாராட்டுகளை தெரிவித்தார். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பள்ளியின் துணை முதல்வர் குமாரவேல் மற்றும் ஆசிரியப் பெருமக்கள் வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.



புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் அக்கசிப்பட்டி நடுநிலைப் பள்ளியில் வ.உ.சிதம்பரனார் மூக கவசம் அணிந்து பிறந்தநாள் கொண்டாடினர். இந்நிகழ்விற்கு தலைமை ஆசிரியர் பொறுப்பு மணிமேகலை தலைமை வகித்தார். பள்ளி மேலாண்மை குழுத் தலைவி இலக்கியா முன்னிலை வகித்தார். கந்தர்வகோட்டை இல்லம் தேடிக் கல்வி ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் ரகமதுல்லா வ.உ.சிதம்பரனார் வாழ்க்கை வரலாறு குறித்து பேசினார். இந்நிகழ்வில் ஆசிரியர் நிவின், கௌரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




### கைக்குறிச்சி ஸ்ரீபாரதி கல்லூரி நிறுவனத்தில்

## பணியாற்றும் முனைவர்களுக்கு, ஆசிரியர் செம்மல் விருது



திருவரங்குளம் செப்–6
தமிழகக் கல்வி ஆராய்ச்சி வளர்ச்சி நிறுவனம் சார்பில், சென்னை டாக்டர் இராதாகிருஷ்ணன் வாழ்ந்த இல்லத்தில் 'ஆசிரியர் செம்மல்' விருது வழங்கும் விழா நேற்று நடைபெற்றது. இதில் கைக்குறிச்சி ஸ்ரீபாரதி கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியின் முன்னாள் ஆங்கில துறைத்தலைவர், இயக்குநர் மா,குமுதா, கல்வியியல் கல்லூரியின் முதல்வர் தி.சந்திரமோகன் ஆகியோர் விருதுக்கு தேர்தெடுக்கப்பட்டு, சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி (ஓய்வு) பி.என். பிரகாஷிடம் இருந்து விருதை பெற்றனர்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழக துணைவேந்தர் சோ.ஆறுமுகம், தமிழக கல்வி ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் கோ.பெரியண்ணன், ஸ்ரீகிருஷ்ணா ஸ்வீட்ஸ் சேவைச் செம்மல் ம.முரளி மற்றும் பலர் கலந்து கொண்டனர். விருது பெற்றவர்களை ஸ்ரீ பாரதி கல்வி நிறுவனங்களின் தலைவர் குரு. தனசேகரன், செயலர் எல்.தாவூத் கனி, நிர்வாக அறங்காவலர், முதல்வர், உதவிப்பேராசிரியர், மாணவியர், அலுவலகப் பணியாளர் ஆகியோர்கள் வாழ்த்தினர்.

## திருமயம் பெல் சார்பில் ஆதரவற்றவருக்கு நலத்திட்ட உதவி



திருமயம், செப். 6–
புதுக்கோட்டை மாவட்டம் திருமயத்தில் இயங்கி வரும் பெல் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்கள் ஒன்றிணைந்து செயல்படுத்தி வரும் பாரத மிகுமின் நிறுவன ஊழியர்களின் சமூக சேவை அறக்கட்டளையின் மூலமாக புதுக்கோட்டை மாவட்டம் பேராங்குளம் பகுதியில் கணவனை இழந்து 2 பெண் குழந்தைகளுடன் ஆதவற்ற நிலையில் வசிக்கும் சாந்தி மாரிமுத்துக்கு ரூபாய் 20000 மதிப்பிலான நான்கு சக்கர இஸ்திரி வண்டி அறக்கட்டளையின் மூலமாக வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக பள்ளி ஆசிரியை உமா மற்றும் அறக்கட்டளையின் தலைவர், உறுப்பினர்களாகிய ரகுவரன், மற்றும் மாதவன் கலந்துகொண்டனர்.

அறக்கட்டளையின் சேவைகளை பற்றி மாற்றுத்திறனாளிகள் குழு தலைவர் சந்தோஷ்குமாரும் அறக்கட்டளையின் தலைவர் பாலாஜியும் அறக்கட்டளையின் சேவைகள் மற்றும் விதிமுறைகள் எடுத்துரைத்துனர்.

## கந்தர்வகோட்டையில் வட்டார அளவிலான வானவில் மன்றம் சிறார் திரைப்பட போட்டிகள் நடைப்பெற்றது



கந்தர்வகோட்டை செப் 06.
புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் வட்டார அளவிலான வானவில் மன்றம், சிறார் திரைப்பட போட்டிகள் நடைப்பெற்றது. இந்நிகழ்விற்கான போட்டியை தலைமை ஆசிரியர் பழனிவேல் தொடங்கிவைத்தார். வானவில் மன்றம் சார்பில் ஜுன், ஜுலை, ஆகஸ்ட் மாதங்களுக்கான போட்டிகள் சிறுதானிய வகைகள் தொடர்பாக அறிவியல் செயல்முறை, செயல் திட்டம், தனிநபர் நடிப்பு ஆகிய போட்டிகள் நடைபெற்றது.

அதுபோல 6 முதல் 9 வகுப்பு வரை சிறார் திரைப்பட போட்டிகள் நிலா, ஈட்டி உள்ளிட்ட படங்களில் இருந்து போட்டிகள் நடைபெற்றது. வானவில் மன்றம் சார்பில் நடைபெற்ற போட்டியில் மாணவர்கள் பல்வேறு வகையான சிறுதானிய உணவுகளை பயன்படுத்தி செயல்முறை மூலம் விளக்கினார். போட்டிகளில் வெற்றி பெற்ற முதல் இரண்டு மாணவ, மாணவிகள் மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொள்கின்றனர். போட்டிகளுக்கான ஒருங்கிணைப்பாளராக ஆசிரியர் அன்பழகன், போட்டி ஏற்பட்டாளராக மேற்பார்வையாளர் பிரகாஷ் ஆசிரியர் பயிற்றுநர் ராஜேஸ்வரி, இல்லம் தேடி கல்வி மைய ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் ரகமதுல்லா ஆகியோர் செயல்பட்டனர். நடுவர்களாக வெள்ளாள விடுதி அரசு உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் பொறுப்பு முத்துக்குமார், ஆசிரியர்கள் மணிகண்டன், பழனிச்சாமி, சோமசுந்தரம், காளியம்மாள் ராஜேந்திரன் ஆனந்தராஜ், ராஜமாணிக்கம், தவச்செல்வம், புவனேஸ்வரி, வானவில் மன்ற கருத்தாளர்கள் தெய்வீக செல்வி, வசந்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

## உடையார்பாளையம் அருகே எம்ஆர் பாலிடெக்னிக் கல்லூரியில் ஆசிரியர் தின விழா




அரியலூர் செப். 6–
உடையார்பாளையம் அருகே எம்.ஆர். பாலிடெக்னிக் கல்லூரியில் ஆசிரியர் தின விழா நடைபெற்றது. இது பற்றி தத்தனூர் எம்.ஆர்.சி கல்வி நிறுவனங்களின் தாளாளர் ரகுநாதன் வெளியிட்ட செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது:

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு, அரியலூர் மாவட்டம் உடையார்பாளையம் அடுத்துள்ள தத்தனூர் எம் ஆர் பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்களுக்கு, ஆசிரியர்கள் தொடர்பான கவிதை, கட்டுரை, ஓவியம் மற்றும் பேச்சுப்போட்டி நடத்தப்பட்டு, மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

ஆசிரியர்களின் தலைமைப் பண்புகள் குறித்து, கல்லூரி விரிவுரையாளர்கள் பேசினார்கள். மாணவர்களும், தங்களது பள்ளி, கல்லூரி ஆசிரியர்கள் குறித்து பேசினார்கள். அதனை தொடர்ந்து அனைத்து ஆசிரியர்களுக்கும் கல்வி நிறுவனங்களின் தாளாளர் சார்பாக பேனா வழங்கப்பட்டது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## புதுக்கோட்டையில் கவிராசன் அறக்கட்டளை சார்பில், ஆசிரியர் தின விழா



புதுக்கோட்டை, செப். 6–
விழாவிற்கு, கைக்குறிச்சி ஸ்ரீ பாரதி கல்வி நிறுவனங்களின் தலைவர், குரு. தனசேகரன் தலைமை வகித்தார்.

இந்த விழாவில், புதுக்கோட்டை கலைமகள் மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளி முதல்வர் இரா. கௌசல்யா, புதுக்குடி அரசு உயர்நிலைப்பள்ளி ஆங்கில ஆசிரியர் த.சகாயராஜ், குழிபிறை மு.சி.த. இராம. மேல்நிலைப்பள்ளி தமிழ் ஆசிரியர் வீர.ராமசாமி, கீரமங்கலம் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி ஆங்கில ஆசிரியர் சு.குகன், வடவாளம் அரசு மேல்நிலைப் பள்ளி கணித ஆசிரியர் மா.ரெஜி, ஆகிய ஐவருக்கும், நட்சத்திர ஆசிரியர் விருதுகளை, நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம். அப்துல்லா வழங்கி, சிறப்புரை ஆற்றினார்.

அவரின் உரையில் "என்னுடைய உயர்வுக்கு காரணம் என் ஆசிரியர்கள்தான். அதிலும், என்னை வகுப்பின் தலைவனாக்கிய பாலையா பள்ளி ஆசிரியை விஜயலெட்சுமி, இன்று நான், நாடாளுமன்ற உறுப்பினராக உயர, முக்கியமான காரணம். அவர்தான், என்னை முதலில் மேடை ஏற்றிப்பேச வைத்தார். மாணவர்கள் வாழ்வில் உயர்வது கூட, ஆசிரியர்களுக்கு செய்யும் நன்றிதான். மாணவிகளாகிய நீங்களும் வாழ்வில் உயர்ந்து காட்டுங்கள். அப்போதும், ஒரே மாதிரி இருப்பதை விட, ஒற்றுமையாக இருங்கள். நாட்டுக்கும் அதுவே தேவை!" என்று குறிப்பிட்டார். தேசிய நல்லாசிரியர் விருதாளர் கவிஞர் தங்கம் மூர்த்தி, தனியார் தொலைக்காட்சியின் பேச்சு நிகழ்வின் வெற்றியாளர் கவிஞர். மு.இராகவேந்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். ஸ்ரீ பாரதி கல்வி நிறுவனத்தின் நிர்வாகிகள் கிருஷ்ணமூர்த்தி, லியோ ஃபெலிக்ஸ் லூயிஸ், கனகராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவின் தொடக்கத்தில், கவிராசன் அறக்கட்டளை இணை நிர்வாக அறங்காவலர் கவி. முருகபாரதி வரவேற்புரை ஆற்றினார். நிறைவில், ஸ்ரீ பாரதி கலை அறிவியல் கல்லூரி முதல்வர் செ.கவிதா நன்றியுரை ஆற்றினார்.

## அறந்தாங்கி அருகே ஸ்ரீ கூத்தபெருமாள் அய்யனார் திருக்கோயில் புரவி எடுப்புதிருவிழா

### அமைச்சர் மெய்யநாதன் பங்கேற்பு



அறந்தாங்கி,செப்.6–
புதுக்கோடை மாவட்டம் அறந்தாங்கி அருகே அமரசிம்மேந்திரபுரம் கிராமத்தில் பிரசித்தி பெற்ற ஸ்ரீ கூத்தபெருமாள் அய்யனார் சுவாமி திருக்கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் ஆண்டுதோறும் மழைவளம் வேண்டியும் விவசாயம் செழிக்கவும் புரவி எடுப்பு திருவிழா நடைபெறும். நேற்று நடைபெற்ற புரவி எடுப்பு திருவிழாவில் கொடிவயல்கிழக்கு வேளாளர் தெருவில் செய்யப்பட்ட அய்யனார், கருப்பர், காளியம்மன் உள்ளிட்ட சாமி சிலைகளும், இருநூறுக்கும் மேற்பட்ட குதிரை,காளை, மதலை உள்ளிட்ட சிலைகளை கடந்த பத்து நாட்களாக விரதமிருந்த பக்தர்கள் மேளம் தாளம் முழங்க ஆட்டம் பாட்டத்துடன் சுமார் 6கிலோ மீட்டர் தூரம் ஊர்வலமாக தோளில் சுமந்து சென்று ஸ்ரீ கூத்தபெருமாள் அய்யனார் கோயில் அருகில் உள்ள கண்மாய் திடலில் இறக்கி வைத்தனர்.

பின்னர் அய்யனார்,கருப்பர் காளியம்மன் உள்ளிட்ட சாமி சிலைகளுக்கு கண்மாய் திடலில் வைத்து கண்திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றபின் கோயிலுக்கு எடுத்துச் சென்று இறக்கி வைத்து நேர்த்திக்கடன் செலுத்தினர், முன்னதாக புரவி எடுப்பு திருவிழாவில் தமிழக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மெய்யநாதன் கலந்து கொண்டு சிறப்பித்தார், இந்த புரவி எடுப்பு திருவிழாவில் அமரசிம்மேந்திரபுரம், கொளக்குடி, கொடிவயல், மங்களநாடு உள்ளிட்ட சுற்றுவட்டார கிராமமக்கள் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டு கூத்தபெருமாள் அய்யனாரை வழிபட்டுச் சென்றனர்.

### கலைஞர் கருணாநிதி செம்மொழித்தமிழ் விருது பெற்ற

## அரியலூர் தமிழ் பண்பாட்டு பேரமைப்பு செயலாளர் ராமசாமிக்கு பாராட்டு விழா



அரியலூர், செப். 6–
கலைஞர் கருணாநிதி செம்மொழி தமிழ் விருது பெற்ற, அரியலூர் தமிழ் பண்பாட்டு பேரமைப்பு செயலாளர் ராமசாமிக்கு பாராட்டு விழா நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட தமிழ் பண்பாட்டு பேரமைப்பு செயலாளரும், செம்மொழித்தமிழ் ஆய்வு மத்திய நிறுவனத்தின் முன்னாள் பொறுப்பு அலுவலருமான, க.ராமசாமிக்கு, விருது வழங்கும் விழா சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்றது. சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்ற விழாவில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், கலைஞர் கருணாநிதி செம்மொழி விருது–2023, மற்றும் ரொக்க பரிசு உள்ளிட்டவற்றை, பேராசிரியர் ராமசாமிக்கு வழங்கி பாராட்டினார்.

இதையடுத்து, கலைஞர் கருணாநிதி செம்மொழி தமிழ் விருது பெற்ற பேராசிரியர் ராமசாமிக்கு பாராட்டு விழா, சென்னை–மேடவாக்கம், நம்ம வீடு வசந்த பவன் ஹோட்டலில் நடைபெற்றது. அரியலூர் மாவட்ட தமிழ் பண்பாட்டு பேரமைப்பு தலைவர் சீனி பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற பாராட்டு விழாவில், பலரும் பேராசிரியர் ராமசாமிக்கு சால்வை அணிவித்து பாராட்டு தெரிவித்தனர். அதைத் தொடர்ந்து தமிழ் பண்பாட்டு பேரமைப்பு சார்பில் வாழ்த்து கேடயம் வழங்கப்பட்டது.

விழாவில் புலவர் சம்பந்த மூர்த்தி, தமிழ் பண்பாட்டு பேரமைப்பு நிர்வாகிகள், நல்லப்பன் ஆசிரியர், புலவர் சி.இளங்கோ, ஜோதி ராமலிங்கம், முனைவர் கொ.வி. புகழேந்தி, சித்த மருத்துவர் வேலுசாமி, அ.நல்லப்பன், ராவணன், அரங்கநாடன், பாரிவள்ளல், சிவக்கொழுந்து, சௌந்தரராஜன் ஆசிரியர், முனைவர் க.சின்னதுரை, செல்லபாண்டியன், செவ்வேள் மணிவேல், இளவரசன், திருச்சி ராஜேந்திரன், திமுக செந்துறை வடக்கு ஒன்றிய செயலாளர் எழில் மாறன் மற்றும் பேராசிரியர் க ராமசாமி குடும்பத்தினர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

06.09.2023 ❖ வரலாறு

புதுக்கோட்டை விளையாட்டு மைதானத்தில்

# சிந்தடிக் ட்ராக் அமைக்க வாய்ப்பில்லை திமுக மாநிலங்களவை உறுப்பினர் திட்டவட்டம்

புதுக்கோட்டை , செப்.6-

புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டு மைதானத்தில் சிந்தடிக் ட்ராக் அமைக்க தற்போது வாய்ப்பில்லை என்று திமுக மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா தெரிவித்தார்.



புதுக்கோட்டை மாவட்ட அளவிலான இளையோருக்கான தடகளப் போட்டி மாவட்ட விளையாட்டு மைதானத்தில் செப்டம்பர் 8,9, ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற உள்ளது. அது தொடர்பாக நேற்று செய்தியாளர்களை சந்தித்த அவர் கூறுகையில்: செப்டம்பர் 8,9 ஆகிய இரண்டு தேதிகளில் 8 வயது முதல் 20 வயதுக்குட்பட்டோர் அனைத்து பிரிவிலும் பங்கேற்கும் வகையிலான தடகளப்போட்டி நடைபெற உள்ளது. புதுக்கோட்டை விளையாட்டு மைதானத்தில் ஒன்றிய அரசின் சிந்தடிக் டிரக் அமைக்க தற்போது வாய்ப்பு குறைவாக இருக்கின்றது. ஏனென்றால் காட்டுப்புது குளத்தின் சரிபாதி தான் மாவட்ட விளையாட்டு மைதானம். மழை காலங்களில் மாவட்ட விளையாட்டு மைதானம் முற்றிலுமாக மூழ்கி விடுவதை தொடர்ந்து பார்த்து வருகின்றோம். அப்படி இருக்கையில் சிந்தடிக் ட்ராக் அமைத்தால் அது வீணாகிவிடும். ஆகையால் மைதானத்தின் உயரத்தை மணல் கொண்டு அடித்து உயர்த்திய பிறகு அத்திட்டத்தை தொடங்கினால் மட்டுமே பயனுள்ளதாக இருக்கும் இது தொடர்பாக தொடர்ந்து விவாதிக்கப்பட்டு வருகிறது.

இந்தியாவை பாரதம் என்று பெயர் மாற்றும் முயற்சிக்கு அவர்களுக்கு பிடித்ததை செய்ய வேண்டும் என்ற சர்வாதிகாரத்தின் அடிப்படையில் செய்து வருகின்றனர். தற்போது கூட ஆங்கிலத்தில் இருக்க கூடிய குற்றவியல் சட்டப் பெயர்களை கூட இந்தியில் மாற்றக்கூடிய சூழ்நிலையை பார்த்து வருகிறோம். அனையபோர ஜோதி பிரகாசமாக எரிந்து வருகிறது பார்த்துக் கொள்வோம். இந்தியா என்றால் கொத்தடிமை என்ற பெயர் எந்த அகராதியில் உள்ளது. எதை வைத்து அவர்கள் இந்தியா என்பது கொத்தடிமை என்று கூறுகிறார்கள். எந்த காலத்தில் எதிலிருந்து அவர்கள் கூறுகிறார்கள். இந்தியா என்பது பிரிட்டிஷ் கொடுப்பதற்கு முன்னாள் சிந்து நதிக்கு இந்த பக்கம் இருப்பவர்களை இந்தியர்கள் என்று கூறினார்கள். நாங்கள் தேர்தல் பிரச்சாரத்தை எதெல்லாம்செய்யவேண்டுமோ எங்கள் சார்பாக அவர்களே எங்களுக்கு பிரச்சாரம் செய்து வருகின்றனர். அது எங்களுக்கு அது மகிழ்ச்சி தான்.

முதலில் அனைத்து சமுதாய மக்களுக்கும் ஒரே நாடு ஒரே சுடுகாடு என்று வரட்டும் பின்னர் ஒரே நாடு ஒரே தேர்தல் குறித்து பேசலாம் உதயநிதி தலைக்கு 10 கோடி என்று ஒரு சாமியார் அறிவித்ததற்கு அதற்கு உதயநிதி தனது தலையை சீவ பத்து ரூபாய் சீப்பே போதும் என்று பதில் கூறியுள்ளார். சனாதனம் குறித்து உதயநிதி பேசியதற்கு விமர்சனங்கள் வேறு மாறியாக வரட்டும். விமர்சனம் தான் உரையாடலை உருவாக்கும். ஒரு உரையாடல் தான் சிந்தனையை பலமாக்கும். வடமாநிலங்களில் உரையாடல் வரட்டும் அவர்களும் சிந்திக்கட்டும் எது நல்லது என்று நினைக்கிறார்களோ அந்த முடிவுக்கு அவர்கள் வரட்டும். வட மாநிலத்தில் உரையாடலே இல்லாமல் இருந்தது அப்போது உதயநிதி குறித்து ஒரு உரையாடல் தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மக்கள் யோசித்ததை போல் அவர்களும் யோசிப்பார்கள்.

சனாதனம் குறித்து திட்டமிட்டு சர்ச்சையை உதயநிதி உருவாக்கவில்லை. திட்டமிட்டு சொல்வது என்றால் திடீரென்று ஒரு கருத்தை கூறுவது தான் ஆனால் இந்த கருத்தை 100 ஆண்டுகளாக திராவிட இயக்கம் இந்த கருத்தை தெரிவித்து வருகிறது. இந்தத் திட்டம் நூறாண்டுகளுக்கு முன்பே வகுக்கப்பட்டது திடீரென்று எல்லாம் பேசவில்லை. எப்போதும் பேசுவதை தான் நாங்கள் பேசி வருகிறோம் தற்போது தான் அவர்களுக்கு தெரிகிறது நாங்கள் திட்டமிட்டு எல்லாம் பேசவில்லை. என்றார்.



தலைமைச் செயலகத்தில், நேற்று. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தலைமையில் துறையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மோகன், மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டையில் நாளை மின்சாரம் சம்பந்தமாக மக்கள் குறைதீர் நாள் கூட்டம்

புதுக்கோட்டை , செப்.6-

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் சார்பில் மக்கள் குறைதீர் நாள் கூட்டம் புதுக்கோட்டையில் நாளை நடைபெறுகிறது இது குறித்து மின்வாரிய மேற்பார்வை பொறியாளர் சேகர் வெளியிட்டிருக்க கூடிய செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

புதுக்கோட்டை கோட்டத்திற்கு உட்பட்ட புதுக்கோட்டை, இலுப்பூர் மற்றும் கந்தர்வகோட்டை பகுதிக்கான நுகர்வோர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 10:30 மணிக்கு மின்வாரிய செயற்பொறியாளர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது. புதுக்கோட்டை கோட்டத்திற்குட்பட்ட மின் நுகர்வோர் மற்றும் பொதுமக்கள் மேற்படி கூட்டத்தில் மேற்பார்வை பொறியாளரை நேரில் சந்தித்து தங்களின் மின்வாரிய சம்பந்தமான குறைகளை தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளுமாறு அதில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.



செப்டம்பர் 7ம் தேதி நாளைய தினம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மார்க்சிஸ்ட் நடத்தும் விலைவாசியை குறை இளைஞர்களுக்கு வேலை கொடு என்ற கோரிக்கையை முன்னிறுத்தி மாநிலம் தழுவிய மறியல் போர் குறித்து விளக்கி கட்சியின் நகர குழு சார்பாக நேற்று புதுக்கோட்டை நகர் முழுவதும் தெருமுனைப் பிரச்சாரம் மாவட்ட குழு உறுப்பினர் ஜெயபால் தலைமையில் மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் சங்கர், நாகராஜன், சிஐடியு மாவட்ட தலைவர் முகமது அலி ஜின்னா, நகர செயலாளர் சோலையப்பன், நகர குழு உறுப்பினர்கள் முத்தையா, பழ.குமரேசன், சிஐடியு ரத்தினவேல், மாதர் சங்க நகர செயலாளர் முத்துமாரி, வாலிபர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் மகாதீர், மாணவர் சங்க மாவட்ட தலைவர் சந்தோஷ், செயலாளர் ஜனா உள்ளிட்டோர் கலந்துகொண்டு பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

# கந்தர்வகோட்டையில் தேசிய நெடுஞ்சாலை துறையை கண்டித்து பாமக கண்டன ஆர்ப்பாட்டம்

கந்தர்வகோட்டை, செப்.6-


கந்தர்வகோட்டையில் தேசிய நெடுஞ்சாலைத்துறையை கண்டித்து பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது. கந்தர்வகோட்டை பேருந்து நிலையம் முன்பாக நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு கட்சியின் ஒன்றிய செயலாளர் கி. ஜெய்சங்கர் தலைமை வகித்தார், மாவட்ட தலைவர் இரா. பிரபு, சமூக நீதிப் பேரவை செயலாளர் வழக்கறிஞர் கருப்பையா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



கண்டன ஆர்ப்பாட்டத்தில் கந்தர்வகோட்டை பகுதியில் உள்ள தேசிய நெடுஞ்சாலையில் பல இடங்களில் சாலைகள் மிகவும் மோசமான ஆபத்தை விளைவிக்கும் வகையில் பழுதடைந்து உள்ளது, இதனால் இப்பகுதியில் அடிக்கடி விபத்து நடந்து கொண்டே உள்ளது. நெடுஞ்சாலை நடுவில் உள்ள மின்கம்பங்களில் மின் விளக்குகள் எரிவது இல்லை எனவும், சாலை ஓரங்களில் உள்ள கருவை மரங்களை அகற்றி வாகன ஓட்டிகளுக்கு பாதுகாப்பான பயணத்தை அமைத்து தர வேண்டும் எனவும், சாலை நடுவே கிடக்கும் குப்பைகள் மண்களால் பெரிதும் பாதிப்பு ஏற்படுவதாகவும், தேசிய நெடுஞ்சாலையில் உள்ள கழிவறைகள் போதிய பராமரிப்பின்றி பயனற்று கிடப்பதை சரி செய்ய வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை குறித்து கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் நகரச் செயலாளர் ரா. சுரேஷ், ஒன்றிய துணைச் செயலாளர் சக்திவேல், கிளைச் செயலாளர் சக்திவேல், வடக்கு ஒன்றிய தலைவர் திருப்பதி உள்ளிட்ட கட்சியின் பல்வேறு பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



மதுரை அருகில் உள்ள திருமங்கலத்தில் பாரதிய ஜனதா கட்சியின் மாநில பொதுச் செயலாளர் இராம. சீனிவாசனின் பிறந்தநாள் விழாவுக்கு ஏற்பாடு செய்திருந்தனர். மேற்கு மாவட்டம் சார்பாக அவரை திருமங்கலத்தில் உள்ள அருள்மிகு மீனாட்சி சொக்கநாதர் சுவாமி திருக்கோயில் சிறப்பு பூஜை வழிபாடு, சரவணகுமார் மாவட்ட துணைத் தலைவர் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக மாவட்டத் தலைவர் சசிகுமார், பொருளாதாரப் பிரிவு மாநிலத் தலைவர் ஷா, ஆன்மீகத் தலைவர் மாரிமுத்து, மாவட்ட துணைத் தலைவர் அண்ணாமலை, மலர் விக்கி ஆன்மீகத் துணைத் தலைவரும் மற்றும் கட்சித் தொண்டர்கள் கலந்து கொண்ட போது எடுத்த படம்.



மதுரை அரசு சட்டக்கல்லூரியில் தியாகி இம்மானுவேல் சேகரனாரின் 66வது வீர வணக்க விழா, நடைபெற்றது பா.ஜ.க. மதுரை மாவட்ட பார்வையாளர் செல்வராஜ், அகில இந்திய பார்வேர்ட் ப்ளாக் பொது செயலாளர் ஸ்ரீராம் ஹிந்துத்துவா ஆதரவாளர் ஜெயந்தன், அகில இந்திய யாதவர் மகா சபை பால முருகன், தமிழர் இயக்கம் ராசா கிருஷ்ணன் மள்ளர் சேனை நிறுவனர் சோலை பழனிவேல் ராஜன் பா.ஜ.க. மதுரை மாவட்ட ஆன்மிக பிரிவுத் தலைவர் போதிலட்சுமி, வேந்தர் குல இளவரசர்கள் சங்கம் பர்மா முனீஸ் தேவேந்திரன் சபாபதி மல்லர் ஆனந்த் பண்டியர் வழக்கறிஞர் சரவணா பாண்டியன், வழக்கறிஞர் சரவணா ஆனந்த், வழக்கறிஞர் தீபன் ராஜ் மதுரை ஒருங்கிணைப்பு குழு மானகிரி சரத், விஜய், அயங்களை ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்,அரசு விழாவாக அறிவிக்க வேண்டும் என கோரிக்கை வைத்தனர்.

# புதுக்கோட்டையில் சிட்டி ரோட்டரி சங்கம் சார்பாக ஆசிரியர் தின விழா கொண்டாட்டம் மற்றும் 35 ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்ச்சி



புதுக்கோட்டை, செப்.6-

புதுக்கோட்டை சிட்டி ரோட்டரி சங்கம் சார்பாக ஆசிரியர் தின விழா கொண்டாட்டம் மற்றும் 35 ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்ச்சி சங்கத் தலைவர் அசோகன் தலைமையில் அருள்மிகு பிரகதாம்பாள் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது, முன்னதாக வருகை தந்த அனைவரையும் முதுகலை அறிவியல் ஆசிரியர் இளங்கோ வரவேற்றார், நிகழ்ச்சியில் மண்டல ஒருங்கிணைப்பாளர் ஆரோக்கியசாமி, துணை ஆளுநர் ஜெயக்குமார், சங்க செயலாளர் முத்தன் அரசகுமார், கல்வி குழுத் தலைவர் இப்ராஹிம் பாபு, நகர்மன்ற உறுப்பினர் ராஜா முஹம்மது, சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு சங்கத் தலைவர் மாருதி கண.மோகன் ராஜா வாழ்த்துரை வழங்கினார்.

புதுக்கோட்டை முதன்மை கல்வி அலுவலர் மா.மஞ்சுளா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார் நிகழ்ச்சியில் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களையும் சங்கத் தலைவர் இனிப்பு வழங்கி கௌரவித்தார், முன்னதாக சர்வபள்ளி டாக்டர் ராதாகிருஷ்ணனின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து வணக்கம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது, நிகழ்ச்சியில் நகர்மன்ற உறுப்பினர் சேட் என்ற அப்துல் ரகுமான், ஆரவாமுதன் திட்ட இயக்குனர்களாக செயல்பட்டனர், நிறைவாக சங்க பொருளாளர் சங்கர் நன்றி கூற விழா இனிதே நிறைவு பெற்றது, நிகழ்ச்சியின் முன்னாள் தலைவர் பார்த்திபன் மற்றும் உறுப்பினர்கள் யோகேஸ்வரன் பாரூக் ஜெய்லானி, தங்கராஜா, தயாளன், அன்பழகன், செல்வரத்தினம், பிரபு மற்றும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.



தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைக்கு 10 கோடி அறிவித்த உத்தர பிரதேச மாநில அயோத்தியில் உள்ள பரமஹம்சாவை கண்டித்து நேற்று தமிழ் புலிகள் கட்சி சார்பாக உருவ பொம்மை எரிப்பு போராட்டம் நடைபெற்றது. இதில் ஹாட்கேவேர், கோல் வால்கர், சவார்க்கர் ஆகியோர் மிரட்டல் விடுத்ததை கண்டித்தும் குற்றாலம் குமார் தெற்கு மாவட்ட செயலாளர் தலைமையில் உருவப் படங்களை எரித்தனர். இந்நிகழ்ச்சியில் வடக்கு மாவட்ட செயலாளர் சந்திரசேகர், இளம்புலிகள் மாவட்ட செயலாளர் தமிழ் குமரன், கடையநல்லூர் தொகுதி செயலாளர் செல்வராஜ், மாவட்ட மாணவரணி செயலாளர் சின்னத்தம்பி, கடையநல்லூர் ஒன்றிய செயலாளர் கண்ணன், மாரியப்பன், சுள்ளான், கிடாரி செல்வா உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# வருங்கால தமிழகத்தை வழிநடத்துவது விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதிதான் : அறந்தாங்கியில் அமைச்சர் மெய்யநாதன் பேச்சு

அறந்தாங்கி, செப்.6-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே சுனையக்காடு ஊராட்சியில் ரூ.40 லட்சம் மதிப்பீட்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில் நடைபெற உள்ள



சாலைமேம்பாடு, குளங்கள் தூர்வாருதல், ஊரணிகளை புதுப்பித்தல், பள்ளி சுற்றுசுவர் கட்டுதல் கிராமப்பகுதிகளில் அடிப்படை வசதி உள்ளிட்ட பணிகளை சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ வீ.மெய்யநாதன் துவக்கி வைத்தார்.

நிகழ்ச்சியை தொடங்கி வைத்த பின் பேசிய அமைச்சர் மெய்யநாதன், 17- லட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் இந்தியாவில் எந்த மாநிலமும் செயல்படுத்தாததை இந்தியாவில் முன்னோடியாக தமிழகத்தில் காலை உணவு திட்டத்தை தந்தவர் தமிழ்நாடு முதலமைச்சர் என்றும், வருங்கால தமிழகத்தை வழிநடத்துவது விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதிதான் என்றும் புகழ்ந்து பேசினார்.

முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவில் நாம் உறுதிமொழி ஏற்போம் மக்களுக்காக பல்வேறு திட்டங்களை தந்த தமிழக முதல்வருக்கு உறுதுணையாக இருப்போம் என்றும் பேசினார், நிகழ்ச்சியில்ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன் கிழக்கு ஒன்றிய செயலாளர் குமார் மாவட்ட திட்ட இயக்குனர் மற்றும் அறந்தாங்கி வட்டாட்சியர்,வட்டார வளர்ச்சி அலுவலர் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் அருகில் உள்ள சுப்பிரமணியபுரத்தில் அமைந்துள்ள வியாச பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ஆசிரியர் தின விழா வெகு விமர்சையாக நடைபெற்றது.மாணவிகள் ஆசிரியையாக வேடமிட்டு ஒரு நாள் ஆசிரியையாக வகுப்பறைகளுக்கு சென்று பாடங்களை நடத்தினர், அவற்றில் சிறந்த ஆசிரியையாக செயல்பட்ட மாணவிகளுக்கு கல்லூரி நிர்வாகத்தின் சார்பாக பரிசுகள் வழங்கி சிறப்பித்தனர்.

# மௌண்ட் சீயோன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் டாக்டர் இராதாகிருஷ்ணன் பிறந்தநாள் விழா

புதுக்கோட்டை , செப்.6-

புதுக்கோட்டை மௌண்ட் சீயோன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் டாக்டர் இராதாகிருஷ்ணன் பிறந்தநாளை நினைவு கூறும் வகையில் ஆசிரியர் தின விழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.



நிகழ்ச்சியானது பாடல் குழுவினரின் இறைவாழ்த்துப் பாடலோடும், அதனைத் தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலுடன் துவங்கியது .

மௌண்ட் சீயோன் பள்ளிகளின் துணைத் தலைவர் ஏஞ்சலின் ஜோனத்தன் தலைமை வகித்து வாழ்த்துரை வழங்கினார்.

அவர் தனது உரையில், இந்தத் தலைமுறை மாணவர்கள் தங்கள் எதிர்கால வாழ்க்கை மற்றும் தொழில் போன்றவற்றில் சிறந்த உயரங்களை அடைய ஆசிரியர்கள் கூறும் அறிவுரைகளையும், நல்வழிகளையும் பின்பற்றி நடக்க வேண்டும் என்றுக் கூறினார்.

அதனைத் தொடர்ந்து டாக்டர். இராதாகிருஷ்ணன் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்ச்சியில் மாணவர்கள் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு சேவையைப் பாராட்டும் விதமாக, தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கவிதை மற்றும் பாடல் பாடினார்கள். மேலும் இராதாகிருஷ்ணன் வாழ்கை வரலாறு பற்றிய சொற்பொழிவு மற்றும் நாடகம் அரங்கேறியது.

இவ்விழாவில் மாணவர்கள் ஆசிரியர்களுக்குப் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளையும் நடத்தினர். இந்நிகழ்ச்சியை பள்ளியின் கல்வி முதல்வர் குமரேஷ் மற்றும் நிர்வாக முதல்வர் கிருபா ஜெபராஜ் ஆகியோர் விழாவை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

# ஆவுடையார்கோவில் அருகே கரூரில் இறந்தவர் மரணத்தில் சந்தேகம் இருப்பதாக கூறி அவரது உறவினர்கள் சாலை மறியல்: ஒருவர் கைது

ஆவுடையார்கோவில், செப்.6-

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் தாலுகா கரூரில் சேவுகப்பெருமாள் (52) என்பவர் தனது இருசக்கர வாகனத்தில்சென்றபோது மின்கம்பம் அருகே இறந்துகிடந்துள்ளார். அவரது சடலம் ஆவுடையார்கோவில் அரசு மருத்துவமனையில் பினக்கூறு ஆய்வுக்காக வைக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில் இறந்தசேவுகபெருமாள் விபத்தில் இறக்கவில்லை யாரோஅவரை டிராக்டர் கொண்டு மோதி இறந்துள்ளதாகவும் எனவே சேவுகபெருமாள் மரணம் விபத்து அல்ல திட்டமிட்ட கொலை என்று கூறி ஆவுடையார்கோவில் அரசு மருத்துவமனை அருகே அறந்தாங்கி சாலையிலும்,கரூர் கடை வீதியிலும் அவரது உறவினர்கள் சாலைமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.,இறந்தவருக்கு மல்லிகா (47)என்ற மனைவியும் மூன்று பெண் குழந்தைகளும் உள்ளனர், இறந்த சேவுகபெருமாள்பெயிண்டர் வேலை பார்த்து வந்துள்ளார்.

மறியல் போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் அறந்தாங்கி டிஎஸ்பி சண்முகசுந்தரம் தலைமையிலான காவல்துறையினர் பேச்சுவார்த்தை நடத்தி விசாரணை செய்ததின் பேரில், டிராக்டர் ஓட்டுநர் ராஜா-வை காவல் துறையினர் கைது செய்துள்ளனர்,

இதனால் சாலை மறியல் கைவிடப்பட்டது, மேலும் ஆவுடையார்கோவில் மற்றும் கரூர் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# ஆரத்தி எடுத்து ஆசிரியர்களுக்கு வாழத்துக்கள் கூறிய ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக். மாணவிகள்

புதுக்கோட்டை , செப்.6-

புதுக்கோட்டை ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக். மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு மாணவ மாணவிகள் ஆசிரியர்களுக்கு பூங்கொத்து கொடுத்து வரவேற்ற நிகழ்ச்சி பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.



காலந்தோறும் அறிவு என்னும் ஒளியை அள்ளி அள்ளி வழங்குகின்ற ஆசிரியப்பெருமக்களுக்கு நன்றி கூறும் வகையில் ஆசிரியர் தினத்தில் பள்ளிக்கு வந்த முதல்வர் கவிஞர் தங்கம்மூர்த்திக்கு மழலை மாணவர்கள் ஆரத்தி எடுத்தும் பூங்கொத்து கொடுத்தும் வாழத்துக்களைத் தெரிவித்துக்கொண்டனர்.

மேல்நிலை வகுப்பு மாணவர்கள் பள்ளியில் பணிபுரியும் அனைத்து ஆசிரியப் பெருமக்களுக்கும் பூங்கொத்து கொடுத்து வரவேற்று வாழத்துக்களை தெரிவித்துக்கொண்டனர். பள்ளியின் முதல்வர் கவிஞர் தங்கம் மூர்த்தி அனைத்து ஆசிரியப்பெருமக்களுக்கும் சிறப்பு பரிசுகள் வழங்கினார். ‘ஆசிரியர்களுக்கு இன்னும் கூடுதல் பொறுப்பு இருப்பதாகவும் மாணவர்களை தாங்கள்பெற்றபிள்ளைகளுக்கு மேலாக நினைத்து அவர்களை அன்பு, அறிவு, பண்பு நிறைந்தவர்களாக வளர்க்க வேண்டியது ஆசிரியர்களின் பொறுப்பு” என தெரிவித்து ஆசிரியர் தின வாழ்த்துக்களை தெரிவித்தார்.

# புதுக்கோட்டை சுதர்சன் கல்வி குழுமத்தில் ஆசிரியர் தின விழா கொண்டாட்டம்



புதுக்கோட்டை, செப்.6-
புதுக்கோட்டை சத்தியமங்கலம் சுதர்சன் கல்வி குழுமத்தில் நேற்று ஆசிரியர் தின விழா வெகு விமரிசையாக நடைபெற்றது, கல்லூரி மாணவர்கள் இணைந்து நடத்திய இவ்விழாவை சுதர்சன் கல்விக் குழுமத்தின் இயக்குனர் மற்றும் சுதர்சன் பொறியியல் கல்லூரியின் முதல்வர் கே.ஸ்ரீனிவாசன் வாழ்த்துரை தெரிவித்து துவக்கி வைத்தார், பின்னர் இறுதியாண்டு பயிலும் மாணவ,மாணவியர் தங்கள் பேராசிரியர்களுக்கு சுவாரஸ்யமான விளையாட்டு நிகழ்ச்சிகளை நடத்தி அதில் வெற்றி பெற்றவர்களுக்கு சிறப்பு பரிசுகளையும் வழங்கினர்.

அவரவர் தன் துறை சார்ந்த பேராசிரியர்களுக்கு நினைவு பரிசுகளையும் வழங்கினர், பின்னர் சுதர்சன் கல்வி குழுமத்தின் தாளாளர் ஸ்ரீகே விஜயகுமார் தலைமை தாங்க சிறந்த பேராசிரியர்களுக்கும் ஒருங்கிணைப்பாளர்களுக்கும் என பல்வேறு பிரிவுகளில் சிறந்து விளங்கியவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார். நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றிய அவர் சுதர்சன் கல்வி குழுமத்தின்வளர்ச்சியைகண்டு பெருமிதம் கொள்வதாகவும் மென்மேலும் முன்னேறவும் பேராசிரியர்கள் தாங்கள் தங்கள் துறையில் தனித்துவம் பெற்று வளர்ச்சி அடையவும் ஊக்குவித்து பேசினார், இந்நிகழ்ச்சிக்கு சுதர்சன் தொழில்நுட்பக் கல்லூரியின் முதல்வர் கலியபெருமாள் நன்றியுரை கூறினார், சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சியையும் மாணவ,மாணவிகளையும் செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல் துறையை சார்ந்த கவிதா, மின்னணுவியல் மற்றும் தொலை தொடர்பியல் துறையை சார்ந்த ரமேஷ் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

# புதுக்கோட்டை வைரம்ஸ் மெட்ரிக் பள்ளியில் ஆசிரியர் தின விழா மற்றும் கிருஷ்ண ஜெயந்தி விழாக் கொண்டாட்டம்



புதுக்கோட்டை, செப்.6-
புதுக்கோட்டை வைரம்ஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நேற்று டாக்டர். சர்வபள்ளி இராதா கிருஷ்ணன் பிறந்தநாளை ஆசிரியர் தின விழாவாகக் கொண்டாடப்பட்டது.

இதில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன, மாணவர்கள் ஆசிரியர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்ந்தனர், ஆசிரியர்கள் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது, மேலும் கிருஷ்ண ஜெயந்தி விழா கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் முதுநிலை மழலையர் பிரிவு முதல் இரண்டாம் வகுப்பு மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. இளம்மழலையர் பிரிவு மாணவ மாணவியர்கள் ராதை, கிருஷ்ணன் போல வேடமணிந்து வந்தனர். இவ்விழாவில் பள்ளியின் தலைவர் தேனாள் சுப்பிரமணியன், பள்ளியின் நிர்வாக உறுப்பினர்கள், பள்ளியின் ஒருங்கிணைப்பாளர் அஸ்வினி நாச்சம்மை பள்ளியின் முதல்வர் எஸ்.ஏ. சிராஜுதீன், பள்ளியின் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர், மேலும் பள்ளியின் முதல்வர் சிறப்புரையாற்றினார். ஆசிரியர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன, இவ்விழாவில் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது

# கீரை.தமிழ்ச்செல்வன் கல்விநிறுவனத்தில் ஆசிரியர் தினவிழா



புதுக்கோட்டை, செப்.6-
சத்தியமங்கலம் கீரை.தமிழ்ச்செல்வன் கல்வி நிறுவனத்தில் ஆசிரியர் தினவிழா நேற்று கொண்டாடப்பட்டது. விழாவை செவிலியர் கல்லூரி நான்காம் ஆண்டு மாணவி சத்யா வரவேற்புரை நிகழ்த்தினார்.

கீரை.தமிழ்ச்செல்வன் கல்வி நிறுவனங்களின் தலைவர் கீரை.தமிழ்ராஜா தலைமை வகித்தும், செயலர் பீட்டர் விழாவில் முன்னிலை வகித்தும், தாகூர் மெட்ரிக் உயர்நிலைப்பள்ளியின் தாளாளர் மற்றும் முதல்வருமான பொன். தங்கராஜ்,வல்முருகன், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு டாக்டர்.ராதாகிருஷ்ணன் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

செவிலியர் கல்லூரி முதல்வர் நிர்மலா ஆசிரியர் தின வாழ்த்துக்களை தெரிவித்து வாழ்த்துரை வழங்கினார். மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. செவிலியர் கல்லூரி நான்காம் ஆண்டு மாணவி குணவதி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். செவிலியர் கல்லூரி நான்காம் ஆண்டு மாணவி நிஷா நன்றி கூறினார்.



புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், 9ஏ-நத்தம் பண்ணை ஊராட்சி, விவேகானந்தபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின்கீழ் தயார் செய்யப்பட்டுள்ள காலை உணவுகளின் தரம் குறித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் மெர்சி ரம்யா, நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) (பொ) ஜெயராமன், ஊராட்சிமன்றத் தலைவர் பாபு, வட்டாட்சியர் விஜயலட்சுமி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# அரிமளத்தில் அசிரியர் தின விழா மற்றும் வா.உ.சி பிறந்தநாள்விழா கொண்டாட்டம்



அரிமளம், செப்.6-
புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் லயன்ஸ் கிளப் மூலம் டாக்டர் ராதாகிருஷ்ணன் பிறந்தநாள் விழா ஆசிரியர் தினவிழா மற்றும் வா. உ.சி. சிதம்பரம்பிள்ளையின் 152வது பிறந்தநாள் விழா அரிமளம் மார்க்கெட் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் நடைபெற்றது

ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு சால்வை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது, அதனைத் தொடர்ந்து வ.உ.சி சிதம்பரம் பிள்ளையின் பணத்திற்கு மரியாதை செய்யப்பட்டு அவருடைய சிறப்புகளை பற்றி பரிமாறி கொண்டனர் ஆசிரியர் மற்றும் சங்க உறுப்பினர்கள் மாணவ செல்வங்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது இதில் லயன் சங்கத் தலைவர் பழ.முத்துக்குமார், சாசனத் தலைவர் கே.ஆர்.முருகேசன், செயலர் இளயபெருமாள், பொருளாளர் பிரபாகரன் உறுப்பினர்கள் பெரியண்ணன், துரைராஜ், தேவசகாயம், பள்ளி தலைமை ஆசிரியர் மீனா மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

### பொதுமக்கள் மனுக்களை தாள்களாக பார்க்காமல்

# மக்களுடைய வாழ்கையாக கருதி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் அதிகாரிகளுக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அட்வைஸ்





தென்காசி, செப்.6-
தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நேற்று பல்வேறு துறை சார்ந்த வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ். எஸ்.ஆர்.ராமசந்திரன் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டரங்கில் அமைக்கப்பட்டிருந்த மகளிர் திட்டத்தின் சார்பில் மகத்தான சாதனைகள் 2 ஆண்டு ஆட்சி ஓயா உழைப்பின் ஈராண்டு புகைப்படக் கண்காட்சியினையும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் துறை செயல்பாடுகள் புகைப்படக் கண்காட்சி மற்றும் தலைவர்களின் ஓவியங்கள், வண்ணமிகு பறவைகள் உள்ளிட்ட காய்கறி வடிவமைப்பு கண்காட்சியினையும் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரகநகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில் மகளிர் சுயஉதவிக்குழுக்களின் உற்பத்திப் பொருள்கள் கண்காட்சியினையும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து பார்வையிட்டார்.

பின்னர். ஆவின், உள்துறை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை உள்ளிட்ட பல்வேறு அரசு துறைகளில் துறை சார்ந்த வளர்ச்சி திட்டப்பணிகள் அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின் போது தெரிவித்ததாவது:

இந்நிகழ்ச்சியில் 478 பயனாளிகளுக்கு ரூ.35.68 கோடி மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு கல்வி மற்றும் சுகாதாரத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து செயல்பட்டு வருகிறது பொதுமக்கள் தங்களது கோரிக்கைகள் மற்றும் புகார்களை மனுக்களாக அளிக்கும் போது அலுவலர்கள் அவற்றை உடனடியாக பரிசீலித்து பதிலளிக்க வேண்டும். நீண்ட நாள் பள்ளிக்கு செல்லாமல் இருக்கும் குழந்தைகளை கண்டறிந்து அவர்களை தொடர்ந்து கல்வி கற்க செய்வதிலும் கல்வி திட்டங்கள் அனைத்தும் எல்லா மாணவ, மாணவியர்களுக்கும் சென்றடைவதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். முதலமைச்சர் விரைவில் தென்காசி மாவட்டத்தில் கள ஆய்வு மேற்கொள்ள உள்ளார். பணிகளில் சுணக்கம் கண்டறிப்பட்டால் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். எனவே அனைத்து துறை அலுவலர்களும் அரசுக்கும், மக்களுக்கும் பாலமாக இருந்து அரசுக்கு நற்பெயரை பெற்று தர வேண்டும். இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட ஒருங்கிணைத்த அனைத்து அரசு அலுவலர்களுக்கும் நன்றியை தொறவித்து கொள்கிறேன் என்றார்.

கூட்டத்தில் சிறப்பு திட்டச் செயலாக்கத்துறை அரசு செயலாளர் தரேஸ் அகமது, மாவட்ட ஆட்சித்தலைவர் துரை. இரவிச்சந்திரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சாம்சன், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ்.எம்.குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். பழனி நாடார் (தென்காசி), ஈ.ராஜா (சங்கரன்கோவில்), சதன் திருமலைகுமார் (வாசுதேவநல்லூர்), மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் தமிழ்செல்வி போஸ், மாவட்ட வருவாய் அலுவலர் பத்மாவதி, மாவட்ட ஊராட்சி வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோணி பெர்னான்டோ, தென்காசி நகர்மன்ற தலைவர் சாதிர், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் இளவரசி, உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) ராமசுப்பிரமணியன் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தாலுகா திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் நெடுவாசல் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகளை மாணவ மாணவிகளுக்கு வழங்கி உரையாற்றனார், நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, கோட்டாச்சியர் முருகேசன், வட்டாட்சியர் விஸ்வநாதன், ஒன்றிய செயலாளர்கள் தங்கமணி, ரவி, ஊராட்சி மன்றத் தலைவர் தட்சிணாமூர்த்தி மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



கீரனூரில் மாதரசி தொழில்கல்வி நிறுவனத்தில் அரசு அங்கீகாரம் பெற்ற தட்டச்சு மற்றும் தையலுக்கான சான்று வழங்கும் விழா நடைபெற்றது, இதில் உரிமையாளர் பாரதி தலைமை வகித்தார், நிர்மலாபாத்திமா வரவேற்புரை ஆற்றினார், அரசு தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சிறப்பு விருந்தினர்களாக, மறைவட்ட அதிபரும், கீரனூர் பங்குத்தந்தையுமான சாமிநாதன், உதவிபங்குத்தந்தை தாமஸ் எடிசன், புதுக்கோட்டை மாவட்ட நடிகர் திலகம் சிவாஜி சமூக நலப்பேரவைத் தலைவர் சுப்பையா ஆகியோர் கலந்து கொண்டு சான்றிதழ்கள் வழங்கி சிறப்பித்தனர். இதில் சுமார் 150 மாணவ,மாணவிகள் கலந்து கொண்டு சான்றிதழ்கள் பெற்றுக் கொண்டு மகிழ்ச்சியடைந்தனர். நிறைவாக தையலாசிரியர் சகாய ஜூலி நன்றி கூற விழா இனிதே நிறைவடைந்தது.

### புதுக்கோட்டை செந்தூரான் பொறியியல் மற்றும்

# தொழில்நுட்பக் கல்லூரியில் பைத்தான் பற்றிய ஒருநாள் கருத்தரங்கம்



புதுக்கோட்டை, செப்.6-
புதுக்கோட்டை மாவட்டம், லெணா விலக்கில் அமைந்துள்ள செந்தூரான் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் நேற்று கல்லூரியின் கணிப்பொறியியல் துறை சார்பில் பைத்தான் பற்றிய ஒரு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது.

இந்த கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராக காரைக்குடி டவன இன் நிர்வாக இயக்குநர் ராமையாவெங்கடாச்சலம் கலந்து கொண்டு மாணவர்கள் அனைவரும் தங்களது கனவை எப்படியாவது நிறைவேற்ற வேண்டுமென்றும் மாணவர்கள் தங்களது பெற்றோர்களுடைய கனவுகளையும் நிறைவேற்ற வேண்டுமென்றும் ஒவ்வொரு மாணவர்களும் தங்களுடைய பேச்சுதிறன், ஆளுமை திறன், நேரம் கடைபிடித்தல், இன்றைய சூழ்நிலையில் நிறுவனங்களின் வேலைவாய்ப்பிற்கு ஏற்றவாறு தங்களை தயார்படுத்திக்கொண்டு போன்ற கணினி மொழிகளை தரமாக கற்றுக்கொண்டு மேம்பட வாழ்த்தினார்.

கல்லூரியின் தலைவர் ஏ.வி.எம். செல்வராஜ், துணைத்தலைவர் எஸ். நடராஜன், நிர்வாக இயக்குனர் ஆர்.வயிரவன், முதன்மைச் செயல் அதிகாரி ஏ.வி. எம். எஸ். கார்த்திக், கல்லூரியின் முதல்வர் கணேஷ்பாபு செயலாளர் தியாகராஜன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# அன்னவாசல் தி.மு.க. நகரச் செயலாளர் எம். எஸ். அக்பர் அலி காலமானார்



புதுக்கோட்டை, செப்.6-
புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் தி.மு.க நகர செயலாளரும், எம். எஸ்.ஏ. நிறுவனங்களின் உரிமையாளருமான எம். எஸ். அக்பர் அலி நேற்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை காலமானார். அவரின் ஜனாஸா நல்லடக்கம் இன்று (புதன்கிழமை) காலை 10 மணிக்கு அன்னவாசல் பள்ளிவாசல் மையவாடியில் தொழுகைக்குப் பிறகு நடைபெறுகிறது.

அவரது உடலுக்கு தி.மு.க, நிர்வாகிகள், அனைத்துகட்சி பிரமுகர்கள், தொழிலதிபர்கள், பொதுமக்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். மறைந்த அக்பர் அலிக்கு மதினா பேகம் என்ற மனைவி மற்றும் ஒரு மகன்,2 மகள்கள் உள்ளனர். மதினா பேகம் அன்னவாசல் பேரூராட்சி 5-வது வார்டு தி.மு.க. கவுன்சிலராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### புதுக்கோட்டை மாவட்டத்தில் முதல் முறையாக

# முத்துமீனாட்சி மருத்துவமனை கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்து சாதனை



புதுக்கோட்டை, செப்.6-
புதுக்கோட்டை மாவட்டத்தில் முதல் முறையாக முத்துமீனாட்சி மருத்துவமனை கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்து சாதனை படைத்துள்ளது.

மருத்துவமனை நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:

தெலுங்கானா மாநிலத்தை சேர்ந்த பிரசாத் பதக் என்கிற நோயாளி கல்லீரல் செயல் இழப்பு நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தவருக்கு செப்டம்பர் 5 ம் தேதி புதுக்கோட்டை முத்துமீனாட்சி மருத்துவமனையில் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார் என்றும்.

முன்னதாக சாலை விபத்து ஏற்பட்டு திருச்சி அரசு மகாத்மா காந்தி மருத்துவமனையில் மூளைச் சாவு அடைந்த நபரின் கல்லீரல் தானமாக பெற்று இம்மாற்று அறுவை சிகிச்சை நடைபெற்றது. புதுக்கோட்டை முத்துமீனாட்சி மருத்துவமனை மருத்துவர்களும் சென்னை குளோபல் மருத்துவமனை சிறப்பு மருத்துவர்கள் குழுவும் இணைந்து வெற்றிகரமாக இந்த கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சையை செய்தனர். தற்போது பிரசாத் பகத் நலமுடன் சிகிச்சை பெற்று வருகிறார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமைச்சராக செந்தில் பாலாஜி நீடிப்பது தார்மிக ரீதியாக சரியானது அல்ல உயர் நீதிமன்றம்



**சென்னை, செப்.6-**
**'செந்தில் பாலாஜி அமைச்சராக தொடர்வது குறித்து தமிழக முதல்வர்தான் முடிவெடுக்க வேண்டும்' என்று தீர்ப்பளித்துள்ள சென்னை உயர் நீதிமன்றம், 'அமைச்சராக செந்தில் பாலாஜி நீடிப்பது தார்மிக ரீதியாக சரியானது அல்ல' என்று குறிப்பிட்டுள்ளது.**

சட்ட விரோத பணப்பரிமாற்ற தடைச் சட்ட வழக்கில் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் உள்ள செந்தில் பாலாஜி வசம் இருந்த துறைகள் அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, முத்துசாமி ஆகியோருக்கு ஒதுக்கப்பட்டன. செந்தில் பாலாஜியை இலாகா இல்லாத அமைச்சராக தொடர ஆளுநர் அனுமதி மறுத்த நிலையில், இலாகா இல்லாத அமைச்சராக செந்தில் பாலாஜி நீடிப்பார் என கடந்த ஜூன் 16-ம் தேதி தமிழக அரசு அரசாணை வெளியிட்டது.

இந்த அரசாணையை ரத்து செய்யக் கோரி வழக்கறிஞரும், தேசிய மக்கள் கட்சியின் தலைவருமான எம்.எல்.ரவி மனு தாக்கல் செய்திருந்தார். அதேபோல, செந்தில் பாலாஜி எந்த தகுதியின் அடிப்படையில் அமைச்சராக நீடிக்கிறார் என விளக்கம் கேட்க உத்தரவிடக் கோரி கொளத்தூரை சேர்ந்த எஸ்.ராமகிருஷ்ணன், அதிமுக முன்னாள் எம்.பி. ஜெ.ஜெயவர்த்தன் ஆகியோர் ரிட் மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

மேலும், அமைச்சர் செந்தில் பாலாஜியை நீக்கம் செய்வதாக ஜூன் 29-ம் தேதி மாலையில் உத்தரவு பிறப்பித்த ஆளுநர், அடுத்த சில மணி நேரங்களில் அந்த உத்தரவை நிறுத்தி வைப்பதாக எடுத்த முடிவை ரத்து செய்யக் கோரி எம்.எல்.ரவி மற்றொரு வழக்கையும் தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்குகளை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு தீர்ப்புக்காக ஒத்திவைத்திருந்தது.

இந்த வழக்கில் தலைமை நீதிபதி எஸ். வி.கங்கபுர்வாலா மற்றும் நீதிபதி ஆதிகேசவலு ஆகியோர் அடங்கிய அமர்வு பிறப்பித்த தீர்ப்பில், "இலாகா இல்லாத அமைச்சராக செந்தில் பாலாஜி தொடர்வது குறித்து தமிழக முதல்வர்தான் முடிவெடுக்க வேண்டும். அமைச்சராக செந்தில் பாலாஜி நீடிப்பது தார்மிக ரீதியாக சரியனது அல்ல" எனக் கூறி அனைத்து வழக்குகளையும் முடித்து வைத்து உத்தரவிட்டனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

# திருவள்ளூர் கிழக்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு ஆலோசனைக் கூட்டம்



ஊத்துக்கோட்டை, செப்6-
திருவள்ளூர் கிழக்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு ஆலோசனைக் கூட்டம் பெருவாயலில் உள்ள திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் நேற்று மதியம் நடைபெற்றது.

இக்கூட்டத்துக்கு, ஆதிதிராவிட நலக்குழு கிழக்கு மாவட்ட அமைப்பாளர் ஏனம்பாக்கம் சம்பத் தலைமை தாங்கினார். மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் டி.ஜெ.ஜி.தமிழரசன்,மாவட்ட கழக பொருளாளர் ரமேஷ், மீஞ்சூர் பேரூர் கழக செயலாளர் தமிழ்உதயன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில், திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜே. கோவிந்தராஜன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றி பேசினார். கூட்டத்தில் கலைஞரின் நூற்றாண்டு விழாவை ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பின் சார்பாக சிறப்பாக கொண்டாடுவது என்றும், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு தலைவரும், முன்னாள் பால்வளத்துறை அமைச்சருமான மீஞ்சூர் க.சுந்தரம் அவர்களை அண்ணா விருதுக்கு தேர்வு செய்த கழகத் தலைவருக்கு நன்றி தெரிவித்தும்,செப்டம்பர் 17-ம் தேதி வேலூரில் நடைபெறும் முப்பெரும் விழாவில் ஆதிதிராவிடர் நலக்குழுவின் சார்பில் திரளாக கலந்து கொள்வது என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இதில், மாவட்டத் துணைத் தலைவர் சி.நாகராஜன், மாவட்டத் துணை அமைப்பாளர்கள் ஜி.கோபி, எம்.அருள், மீ.வி.ராமகிருஷ்ணன், எஸ்.முருகானந்தம், முக்கரம்பாக்கம் கோதண்டம், இ.பழனி, டி.கே.பழனி, எம்.முனிநாதன், ஜெ.மனோஜ்குமார், டி.பிரபாகரன், எஸ்.ஏசு ராஜன், நி.நெல்சன், உ.சந்துரு, கோளூர் கே.கோபால் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



காரைக்கால் மாவட்டத்தில் நேற்று காரைக்கால் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் அதிகாரியுமான குலோத்துங்கன் தலைமையில் வாக்குச்சாவடி மறு சீரமைப்பு பணி சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் அங்கிகரிக்கப்பட்ட அரசியல் கட்சி தலைவர்களுடன் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று காலை நடைபெற்றது. இதில் வாக்காளர் பதிவு அதிகாரிகளான ஜான்சன் மற்றும் சச்சிதானந்தம் ஆகியோரும் மேலும் துணை வாக்குப்பதிவு அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்கள். இதில் கலந்துகொண்ட அரசியல் கட்சித் தலைவர்கள் தங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்கள். மேலும் 1500 பேருக்கு மேல் உள்ள வாக்குச்சாவடிகளை மறு சீரமைப்பு சம்பந்தமாகவும் மற்றும் பெயர்கள் மாற்றம் சம்பந்தமாகவும் இந்நிகழ்வில் ஆலோசிக்கப்பட்டது.

# பொறையார் கடைவீதியில் உத்திரபிரதேச சாமியார் உருவ பொம்மை எரிப்பு



தரங்கம்பாடி, செப்- 06:
மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுகா பொறையார் கடைவீதியில் உத்தரப்பிரதேச சாமியார் உருவ பொம்மை திமுகவினர் தீயிட்டுஎரித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நிகழ்ச்சி ஒன்றில் சனாதனத்தை குறித்து அவதூறாக பேசியதாக உத்தரப்பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த பரமஹன்ஸ் சாமியார் உதயநிதிஸ்டாலின் தலையை சீவினால் அவர்களுக்கு ரூ.10 கோடி சன்மானம் வழங்கப்படும் என்று அறிக்கை வெளியிட்டிருந்தார்.

இதனை கண்டிக்கும் வகையில் திமுகவினர் பொறையார் பழைய பேருந்து நிலையம் கடைவீதியில் மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தலைமையில் திமுக நிர்வாகிகள் உத்திரபிரதேச மாநிலத்தைச் சேர்ந்த பரமஹன்ஸ் ஆச்சர்யா சாமி உருவ பொம்மையை தீயிட்டு எரித்து செருப்பால் அடித்தும் கண்டனத்தை தெரிவித்தனர்.

இதில் செம்பனார்கோவில் ஒன்றிய செயலாளர்கள் எம். அப்துல்மாலிக், அமுர்த. விஜயகுமார், பி.எம். அன்பழகன், பேரூராட்சி மன்ற தலைவர் சுகுண சங்கரி குமரவேல், நகர செயலாளர் முத்துராஜா, பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் பொன். ராஜேந்திரன், நகர துணைச் செயலாளர் மதியழகன், அவைத்தலைவர் கந்தசாமி, மாவட்ட பிரதிநிதி சுகோபன் உள்ளிட்ட ஏராளமான திமுக நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டு கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.





புதுச்சேரி துணை நிலை ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன், புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி,புதுச்சேரி சபாநாயகர் மற்றும் கல்வித்துறை அமைச்சர் ஆகியோர் முன்னிலையில் நேற்று புதுச்சேரியில் 21 ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருதுகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் காரைக்காலச் சேர்ந்த மூன்று ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருதுகள் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதில் வ உ சி அரசு மேல்நிலைப் பள்ளியில் துணை முதல்வராக பணிபுரியும் ஆசிரியர் கனகராஜ் மற்றும் அரசு தொடக்கப்பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர் செல்வராஜ் மற்றும் 19 ஆண்டுகால ஆசிரியர் சேவையில் நேற்று நல்லாசிரியர் விருது பெற்ற காரைக்கால் பொன் பேத்தி அரசு நடுநிலைப்பள்ளியில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர் கரிகாலன் உட்பட துணை நிலை ஆளுநர் மற்றும் முதலமைச்சர் அவர்களுடன் விருது வாங்கிய அனைவரும் புகைப்படம் எடுத்து கொண்டனர்,

# அருள்மிகு மனோன்மணி அம்பாள் உடனுறை கந்தாலீஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேகம்



செங்கல்பட்டு , செ. 6-
செங்கல்பட்டு மாவட்டம், பிலாப்பூர் கிராமத்திலுள்ள அருள்மிகு மனோன்மணி அம்பாள் உடனுறை கந்தாலீஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது.

அகில உலகையும் படைத்து, காத்து, அருள்பாலித்து வரும் ஈஸ்வரனின் புண்ணிய தலங்களில் ஒன்றான, பிலாப்பூர் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ மனோன்மணி அம்பிகை சமேத ஸ்ரீ கந்தாலீஸ்வரர் சுயம்பு ஆலயத்தில் கர்ப்ப கிரகம், அர்த்தமண்டபம், மகா மண்டபம் முதலிய திருப்பணிகள் புதிதாக கற்காரமாக அமைக்கப்பட்டு நிகழும் சோபக்கிருது வருடம், ஆவணி மாதம் 18ஆம் தேதி, திங்கள்கிழமை, பஞ்சமி திதி, அஸ்வினி நட்சத்திரம், சித்தயோகம் கூடிய சுபயோக சுப தினத்தில் விருச்சிக லக்கனத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது.

மூலவர் கும்பாபிஷே விழாவினை தொடர்ந்து, மகா அபிஷேகம், கைலாய மங்கல வாத்தியம் இசைக்கப்பட்டு அபிஷேக ஆராதனை, தீர்த்த பிரசாதம் வழங்கும் நிகழ்ச்சியும் அதனைத் தொடர்ந்து பகல் 12.45 மணி அளவில் சிறப்பு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் நேஷனல் பண்ணை டாக்டர் சந்திரா ஆனந்தசயனம், ஆலய நிர்வாகி சந்திரசேகர் மற்றும் பிலாப்பூர் கிராமத்தினர் சிறப்பாக செய்திருந்தனர். இந்த நிகழ்வில், சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல், அதிமுக-வின் செங்கல்பட்டு மேற்கு மாவட்ட அம்மா பேரவை மாவட்ட இணை செயலாளர் அட்வகேட் ஜெகதீசன், பாமக-வினைச் சேர்ந்த பசுபதி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## சுய விபரங்களை எந்த வெப்சைட்டிலும் பதிவு செய்ய வேண்டாம்

# மாவட்ட சைபர் கிரைம் இன்ஸ்பெக்டர் இளைஞர்களுக்கு எச்சரிக்கை



மயிலாடுதுறை , செ. 6-
சுய விபரங்களை எந்த வெப்சைட்டிலும் பதிவு செய்ய வேண்டாம் என்று மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மீனா உத்தரவின் பேரில் மாவட்ட சைபர் கிரைம் காவல் இன்ஸ்பெக்டர் மாணவர்களுக்கு எச்சரிக்கைவிடுத்துள்ளார்.

இது குறித்து கொள்ளிடம் பகுதியில் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொண்டு வரும் மாவட்ட சைபர் கிரைம் காவல் இன்ஸ்பெக்டர் புயல் பாலச்சந்திரன் நேற்று கூறுகையில், பொதுமக்களிடையே தற்போது அதிக அளவில் பகுதிநேர வேலை என்ற பெயரில் பெரிய அளவில் மோசடி நடைபெற்று வருகின்றது.

இதில் அதிக அளவில் பாதிக்கப்படக் கூடியவர்கள் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கும் பட்டதாரி இளைஞர்கள் மற்றும் பட்டதாரி பெண்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

இவர்களுடைய டேட்டாக்கள், இவர்கள் வேலை வாய்ப்புகள் தேடுவதற்காக சுய விவரங்களை லிங்க் இன், இண்டீட், நாக்ரி டாட் காம் இது போன்ற இளையதளங்களில் பதிவிடுகின்றனர்.

இதன் மூலம் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் பாதிக்கப்பட்டவர்களின் சுய விவரங்களை திருட்டுத்தனமாக தெரிந்து கொண்டு மேற்கண்ட பகுதி நேர வேலை எனக்கூறி சில தொகைகளை கட்ட சொல்லி கொடுத்து இன்வெஸ்ட்மென்ட் என்ற பெயரில் பல லட்சங்களை சுருட்டி விடுகின்றனர் எனவே இது போன்ற பகுதி நேர வேலை என்று இவைகளை பயன்படுத்த வேண்டாம். அதேபோல் தங்களுடைய சுய விவரங்களை தேவையில்லாமல் எந்த வெப்சைட்டிலும் பதிவு செய்ய வேண்டாம். பிரபலமான நிறுவனங்களின் பெயரில் ஆன்லைன் ஜாப், மற்றும் இணையதளம் மூலமாக போலியான வேலை வாய்ப்புகள் உள்ளதாக குறுஞ்செய்தி விளம்பரங்களை அனுப்பி உங்களை ஏமாற்றக்கூடும். அவர்கள் ஏதேனும் காரணம் கூறி பணம் செலுத்தக் கூறினால் அவர்களிடம் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள் .

மேலும் இது போன்ற அசம்பாவிதங்கள் உங்களுக்கு நடந்து விட்டால் பதட்டம் அடையாமல் உங்கள் மாவட்டத்தில் உள்ள சைபர் கிரைம் காவல் நிலையத்தை அணுக வேண்டும் அல்லது உடனடியாக மாநில சைபர் கிரைம் இலவச உதவி எண் 1930 க்கு 24 மணி நேரத்துக்குள் தொடர்பு கொண்டால் உங்களது பணம் மீட்டு தரப்படும்.

இதே போல் தேவையில்லாத லிங்க் மற்றும் வீடியோ கால் போன்றவற்றை தொட வேண்டாம். கொள்ளிடம் சீர்காழி போன்ற பகுதிகளில் அதிக எண்ணிக்கையில் இளைஞர்கள் இதுபோன்ற முறையில் ஏமாற்றம் அடைந்து வருகின்றனர். கொள்ளிடம் பகுதியில் அதிக எண்ணிக்கையில் இளைஞர்கள் பணத்தை பறிகொடுத்து ஏமாறி வருகின்றனர்.

எனவே இது போன்ற விஷயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும் என்றார்.

## காரைக்கால் மாவட்ட ஆட்சியர் முயற்சியால்

# மாணவ மாணவிகளுக்கு திறன் மேம்பாட்டு இலவச பயிற்சி





காரைக்கால், செ. 6-
காரைக்கால் மாவட்டத்தில் திறன் மேம்பாடு பயிற்சியை மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன், தலைமையில் பேரறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அதன் தொடக்க விழா நேற்று காலை நடைபெற்றது.

இந்த வேலைவாய்ப்புக்கான பயிற்சி முகாம் காரைக்கால் அறிஞர் அண்ணா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நேற்று முதல் மூன்று நாட்கள் ஐபிஎம் திறன் மேம்பாட்டு திட்டத்தின்படி சி.எஸ்.ஆர். பாக்ஸ் மூலமாக அனுபவம் வாய்ந்த வல்லுநர் வேலைவாய்ப்புக்கான வழிகாட்டுதல் மற்றும், நம் திறமைகளை மேம்படுத்திக் கொள்ளுதல் ஆகியவற்றின் பயிற்சிகளை கல்லூரி மாணவ மாணவிகளுக்கு வழங்க இருக்கின்றனர்கள்.

இந்தப் பயிற்சியில் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி இளங்கலை மற்றும் முதுகலை மாணவ மாணவிகள், டாக்டர் கலைஞர் மு கருணாநிதி அரசு முதுகலை மாணவ மாணவிகள் கலந்து கொண்டார்கள். மேலும் வேலைவாய்ப்பில் வளர்ச்சி ஒத்துழைப்பு மற்றும் புதுமைகளை வளர்ப்பதற்கான மூன்று நாட்கள் பயிற்சியும் அளிக்கப்படும்.

இந்நிகழ்ச்சியில் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோருக்கான அமைச்சகத்தின் மகாத்மா காந்தி தேசிய உறுப்பினர் நிருபமா, மற்றும் பேராசிரியர் டாக்டர் சம்பந்தன், மற்றும் சி.எஸ்.ஆர். மூத்த திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜோயா கான் மற்றும், கல்லூரி பேராசிரியர்கள், மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்கள். மேலும், இந்த திறன் மேம்பாட்டு பயிற்சியானது காரைக்கால் மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகள் மற்றும் கல்லூரி மாணவ மாணவிகள் பயன்பெறும் வகையில் வருகின்ற நான்கு வாரங்களுக்கு காரைக்கால் மாவட்டத்தில் உள்ள அனைத்து கல்லூரிகள் மற்றும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நடைபெறும்.

இது காரைக்கால் மாவட்ட மாணவ மாணவிகளுக்கு கிடைக்கப்பெற்ற மிகப்பெரிய வாய்ப்பாகும். இந்த திறன் மேம்பாட்டு பயிற்சி மாணவர்கள் வேலை வாய்ப்பு பெற உறுதுணையாக இருக்கும். மேலும், நிருபமா, மகாத்மா காந்தி நேஷனல் ஃபெலோ, திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகம் இந்தத் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளராக செயல்படுகிறார்கள்

## மயிலாடுதுறை மாவட்டத்தில் 82 விவசாயிகளுக்கு

# மானிய விலையில் பவர் டில்லர் பூம்புகார் எம்எல்ஏ நிவேதா முருகன் வழங்கி துவக்கி வைத்தார்



செம்பனார்கோயில், செப்-06:
தமிழ்நாடு முழுவதும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சி திட்டம் 2023-24ன் படி தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு வேளாண்மைப் பொறியியல் துறை சார்பில் மானிய விலையில் 5 ஆயிரம் பவர் டில்லர் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்த திட்டத்தின்படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளுக்கும் விவசாயிகளுக்கு பவர் டில்லர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள 82 விவசாயிகளுக்கு மானிய விலையில் பவர் டில்லர் வழங்கும் விழா செம்பனார்கோயில் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தில் நடைபெற்றது. விழாவிற்கு வேளாண்மை இணை இயக்குனர் சேகர் தலைமை வகித்தார். மாவட்ட ஊராட்சி குழு தலைவர் உமா மகேஸ்வரி சங்கர், ஒன்றியக்குழு தலைவர்கள் நந்தினி ஸ்ரீதர், மகேந்திரன், வேளாண்மை விற்பனை துறை துணை இயக்குனர் வெற்றிவேலன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் ஸ்ரீதர் வரவேற்றார்.

இந்நிகழ்ச்சியில் மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளரும், பூம்புகார் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் நிவேதா எம்.முருகன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு மயிலாடுதுறை மாவட்டத்திலுள்ள பூம்புகார் சட்டமன்ற தொகுதி, சீர்காழி சட்டமன்ற தொகுதி, மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதிகளில் உள்ள 82 விவசாயிகளுக்கு மானிய விலையில் பவர் டில்லரை வழங்கி பேசினார். அப்போது அவர் கூறுகையில், தமிழ்நாடு முதலமைச்சர், விவசாயிகளின் நலன் கருதி செயல்படுத்தி வரும் எண்ணற்ற திட்டங்களில் சிறப்பான திட்டமாக தற்போது மானிய விலையில் பவர் டில்லர் வழங்கும் திட்டம் உள்ளது. இந்த திட்டத்தின் மூலம் விவசாயிகள் பயன்பெறுவர்.

மேலும் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தை பிற மாநில முதல்வர்களும் செயல்படுத்த முயற்சித்து வருகின்றனர். அந்த வகையில் சிறப்பான திட்டமாக முதலமைச்சரின் காலை உணவு திட்டம் உள்ளது. இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் மக்களை தேடி மருத்துவம் என்ற திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இதுபோன்று முதலமைச்சரின் எண்ணற்ற திட்டங்கள் மூலம் பொதுமக்கள் அனைவரும் பயன்பெற்று வருவது தான் திராவிட மாடல் ஆட்சியாகும். இவ்வாறு பேசினார்.

விழாவில் பூம்புகார் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 25 ஊராட்சிகளை சேர்ந்த விவசாயிகளுக்கு, ரூ.2.12 லட்சம் மதிப்பிலான பவர் டில்லர் வேளாண்மை பொறியியல் துறை சார்பில் ரூ.85 ஆயிரம் மானியத்தில், 37 பவர் டில்லர்கள் மொத்தம் ரூ.30.85 லட்சம் மானியத்தில் வழங்கப்பட்டது.

விழாவில் உதவி பொறியாளர் கீர்த்திவாசன், திமுக தஞ்சை மண்டல தகவல் தொழில்நுட்ப பணி பொறுப்பாளர் ஸ்ரீதர், மயிலாடுதுறை மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தின் நிர்வாக குழு தலைவரும், மாவட்ட துணை செயலாளர் மு.ஞானவேலன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.எம். சித்திக், ஒன்றிய செயலாளர்கள் பி.எம்.அன்பழகன், எம். அப்துல் மாலிக், அமுர்த விஜயகுமார், ராஜா, ஊராட்சி மன்ற தலைவர் விஸ்வநாதன், காளகஸ்திநாதபுரம் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் சரவணன் மற்றும் வேளாண்மை துறையினர், விவசாயிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சிறுவாபுரி ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் வேலூர் இணை ஆணையர் விஜயா ஆய்வு மேற்கொண்டார்



ஊத்துக்கோட்டை, செப்6- திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், சின்னம்பேடு என்று அழைக்கப்படும் சிறுவாபுரியில் பிரசித்தி பெற்ற ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் உள்ளது.

இக்கோவிலுக்கு கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் ரூ.1.25 கோடி செலவில் மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இந்நிலையில், இக்கோவிலுக்கு தொடர்ந்து ஆறு வார செவ்வாய்க்கிழமைகளில் வந்து நெய் தீபம் ஏற்றி வழிபட்டால் வீடு,நிலம், திருமணம்,பிள்ளைபேரு, உத்தியோகம் உள்ளிட்ட வேண்டுதல்கள் நிறைவேறும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாக உள்ளது.

இந்நிலையில்,நேற்று கிருத்திகை, சஷ்டி, செவ்வாய்க்கிழமை என மூன்றும் ஒரு சேர அமைந்ததால் பக்தர்கள் விடியற்காலை முதலே இக்கோவிலுக்கு வந்து நீண்ட வரிசையில் காத்திருந்து தரிசனம் செய்தனர். திருத்தணி முருகன் கோவிலின் துணை ஆணையராக பணியாற்றி வந்த ப.விஜயா பதவி உயர்வு பெற்றார். இவர் நேற்று முன்தினம் வேலூர் இணை ஆணையராக பதவி ஏற்றுக்கொண்டார். இந்நிலையில்,வேலூர் இணை ஆணையர் விஜயா சிறுவாபுரி ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலுக்கு நேற்று மதியம் திடீரென வந்து ஆய்வு செய்தார்.

பக்தர்களுக்கு மதிய உணவு வழங்கும் அன்னதான கூடத்தில் சமையல் செய்யும் இடம்,பொருட்கள் இருப்பு வைக்கும் இடம்,பக்தர்கள் அமர்ந்து உணவு அருந்தும் இடம் ஆகியவற்றை ஆய்வு செய்தார். பின்னர், பக்தர்களுக்கு பரிமாறப்படும் உணவை ஆய்வு செய்தார். இதைத்தொடர்ந்து பக்தர்கள் விரைவாக சுவாமி தரிசனம் செய்ய அமைக்கப்பட்டுள்ள க்யூ வரிசையில் சென்று ஆய்வு செய்து பக்தர்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.

பின்னர், திருக்கோவிலில் நடைபெற்று வரும் திருக்குளம் மேம்பாட்டு பணி, பெருந்திட்ட வளாகப் பணிகளை பார்வையிட்டு குறித்த நேரத்தில் அப்பணிகளை முடிக்க சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார். இந்நிகழ்ச்சியின் போது திருக்கோவிலின் செயல் அலுவலர் செந்தில்குமார், சோளிங்கர் திருக்கோவிலின் உதவி ஆணையர் ஜெயா மற்றும் ஊழியர்கள், பணியாளர்கள் உடன் இருந்தனர்.

# ஜி 20 குடியரசுத் தலைவர் அழைப்பிதழில் இந்தியாவுக்கு பதிலாக பாரத்






# அமைச்சராக செந்தில் பாலாஜி நீடிப்பது தார்மீக ரீதியாக சரியானது அல்ல

# புதுக்கோட்டை விளையாட்டு மைதானத்தில் சிந்தடிக் ட்ராக் அமைக்க வாய்ப்பில்லை



சென்னை / புதுக்கோட்டை | 06.09.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்